# திருமுருகாற்றுப்படை விளக்கம்

(ஆசிரியரின் மணிவிழா மலர்)

24—5—53

ACL. FTS
00367

ஆசிரியர்

பஞ்சநதம் பிள்ளை



ஆசிரியர் R. பஞ்சநதம் பிள்ளை

# திருமுருகாற்றுப் படை விளக்கம்

## 1. திருப்பரங்குன்றம்

எவ்வுயிர்க்கும் மேலாய இன்பவடிவாம் பரம்பொருளை முன்னோர்கள் முருகுவடிவமாக, அழகுப்பொருளாக யாண்டும் கண்டனர். முருகு என்னும் சொல் பலபொருள்களைத் தரும். சிறப்பாக மணம், தெய்வத்தன்மை, இளமை, அழகு என்னும் பொருள்களைக் காட்டும். "பண்டைத் தன்மணம் கமழ் தெய்வத்து இளநலங்காட்டி" என்னும் தொடர்கள் இதற்குச்சான்றாகும். இவ்வுயரிய பண்புகளைக் கொண்டவன் முருகன் ஆவன். முருகனுக்குரிய பெயர்கள் பல, அறுமுகன், அழகன், கந்தன், கடம்பன், குகன், செவ்வேள், சேய், சாமி முதலியனவாம். அடியார்களுக்கு அருள்செய்யும் காரணமாக முன்னவனும் முருகன் மேலான அருவநிலையிலிருந்து இறங்கிக் கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பனிரெண்டுங்கொண்டு உருவக்கோலத்துடன் ஆங்காங்குள்ள கோயில்களிலும் பிற இடங்களிலும் வீற்றிருந்து அருள் செய்கின்றான். முருகனது பெருமையை விளக்கும் நூல்களில் திருமுருகாற்றுப்படை என்பது முருகனும் விரும்பும் முதல் நூலாகத் திகழ்கின்றது. திருமுருகாற்றுப்படை என்பது கடைச்சங்க நூல் தொகுதியில், பத்துப்பாட்டில் முதலாவதாக உள்ளது. இது திரு+முருகு+ஆறு+படை என்னும் நான்கு சொற்களால் ஆகிய தொடர். திரு என்பது சிறப்பைக்காட்டும் அடைமொழி. முருகாற்றுப்படை என்பது முருகனிடத்தில் வழிப்படுத்துதல் என்னும் பொருளை உடையது, அதாவது முருகனது திருவருள் பெற்ற ஒரு புலவன் அவ்வருளைப்

பெற விழையும் மற்ருெரு புலவனுக்கு அக்கடவுளின் இயல்பு, பெருமை, இடங்கள் முதலியவற்றைக்கூறி திரு வருளைப்பெற விடுத்ததாகப் பாடப்பட்ட நூல். 317 அடி களில் அகவல்பாவில் அமைந்தது. முருகன் அமர்ந்துள்ள இடங்களாகிய திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு வாவினன்குடி, திருவேரகம், குன்று-தோருடல், பழமுதிர் சோலை ஆகிய ஆறு படைவீடுகளின் இயற்கை அழகுகள் சொல்லோவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. இது புலவராற் றுப்படை எனவும் வழங்கும், முருகக்கடவுளின் திருவரு ளைப்பெற விரும்புவோர் இந்நூலை பக்தியுடன் பாராயணம் செய்வர். இது முற்கால மக்களின் பழக்கவழக்கங்களை யும் வழிபாட்டு முறைகளையும் தெளிவாக விளக்குவது. "பெற்ற பெருவளம் பெருர்க்கறிவுறீஇ" என்ற இலக் கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்வது. பிற ஆற்றுப்படை களுக்குத் தலைவராயிருந்தோரும் அவர்களிடத்தில் உதவி பெற்றோரும் ஒரொரு காலத்துத் தோன்றி மறைந்தனர். ஆனல் முருகாற்றுப்படைக்குத் தலைவனை முருகனே அன்றும் இன்றும் என்றும் உள்ளவன், ஆன்ருேர்பலர் அவன் திருவருளை அன்றும் பெற்ருர்கள். இன்றும் பெறு கிருர்கள். இனியும் பெற இருக்கிருர்கள். தேனும்பாலும் உடலுக்கு நலந்தரும். இவைகளைக்கொண்டு முருகனுக்கு அபிஷேகம் செய்வர். தேனும்பாலும் முருகனைக் காக் கின்றன. திருமுருகாற்றுப்படை என்னும் தேனும், திருப் புகழாகிய அமுதமும் முருகனைக்காக்கின்றன. இதை மார்க்கசகாயதேவர், "செம்மையுள ஆறுமுகனைத் திரு விரிஞ்சை வருசேயைப்புரந்தருள்கவே மும்மை மலமகல் நக்கீர முனிசொன்ன திருமுருகாறெனுந்தேறலும் எம் மருணகிரிநாதர் ஓதுபதினுருயிரந்திருப்புகழ் அமுதமுமே". என்று அழகாகக் கூறியுள்ளார். முருகனைக்காக்கும் முருகாற்றுத்தேன் முருகனடியாரைக்காவாது விடுமோ?

மேலும் இந்நூல் முருகனின் பன்னிரு செவிகளால் பருகத் தக்க அமுதமென்றும், ஓதிஞல் எண்ணிய பொருள்களை எளிதிற் பெறுவரென்றும், பாக்களில் முதன்மையாக விளங்குவதென்றும், பிணி, மிடி, பகை முதலியன நீங்கும் என்றும் சிவப்பிரகாச சுவாமிகள் "நெடுவேற் செம்மல் பன்னிரு செவியும் ஆரப்பருகமுதாகி, ஓதி உன்னிய உன்னி யாங்கு உதவுவதாகிப் பாவுள் முன்னுறவந்து நிற்கும் முருகாற்றுப்படை", என்றும், "பிணி, மிடி, பகை, இடுக்கண் பேய் இன்னக்கனவு, கள்வர் பணிவிடம் ஒழிக்கும் ஆற்றுப்படை" என்றும் பாடியுள்ளார். பண்ணிலிருந்து எழுவது பாட்டு. எனவே இப்பாட்டை ஆரபி இராகத்தில் பாடவேண்டும் என்பர் ஆன்ருேர். இது சைவத்திருமுறைகளில் 11-ந் திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளது.

இந்நூலை அருளியவர் நக்கீரர் ஆவர். குலப்பெயரால் இப்பெயர் ஏற்பட்டிருப்பினும் நல்லவாக்குடையவர் என்பது புலனுகும். பெரியோர் தாம்பெற்ற இன்பத்தைப் பிறரும் நுகர விரும்புவர். அவ்வாறே நக்கீரரும் தாம் பெற்ற திருவருளைப் பிறரும் பெற்றுய்யும் வண்ணம் இந்நூலை அழியாச் செல்வமாக வழங்கியுள்ளார். சிவபிரானிடம் சாபம் பெற்று வடநாடு செல்லும் நக்கீரர் ஓர் ஆலமரத்தின்கீழ் இருந்து பூஜை செய்யும்போது, ஓர் இலை பாதி நீரிலும், பாதி நிலத்திலும் விழுந்து மீனும் பறவையுமாக மாறி ஒன்றை ஒன்று இழுத்தன. நக்கீரர் மனம் இதில் நாடப் பூஜைக்குப் பழுதுண்டாகவே ஓர் பூதம் இவரைக் குகையில் அடைத்தது. நக்கீரர் அங்கிருந்த யாவரையும் மீட்க எண்ணி முருகாற்றுப் படையைப் பாடினர். முருகன் தோன்றி பூதத்தைக் கொன்று யாவரையும் சிறையிலிருந்து விடுவித்தான். இது வரலாறு.

[இதனால் ஒன்றிய மனதுடன் பூஜை செய்யவேண்டு மென்பதும், ஒரு பூதத்தின் துன்பத்தைப் போக்கிச் சிறை மீட்டதைப் போலவே ஐம்பூதச் சேர்க்கையாகிய உடற் சிறையில் இருக்கும் உயிரையும் மீட்டு நல்வழிப்படுத்து வான் என்பதும் புலனாகின்றன.]

இனி இவ்வாற்றுப்படையில் வரும் முருகனுக்குரிய ஆறு சிறப்பிடங்களில் முதலில் உள்ளது திருப்பரங் குன்றம். இப்பகுதி 77 அடிகளையுடையது. இதன் கருத்து:- "சூரியனைப்போன்ற ஒளியுடைய திருமேனி, அடைந்தோ ரைக்காக்கும் திருவடிகள், பகைவரை அழிக்கும் திருக் கரங்கள் இவைகளை உடையவனும், தெய்வயானையின் கணவனும், கடப்பமாலையை மார்பிலும், வண்டு தீண்டாத காந்தள் கண்ணியை முடியிலும் தரித்தவனும், வேற்படை யால் சூரன் முதலியவர்களை அழித்தவனுமாகிய முருகக் கடவுளின் திருவருளை விரும்பி அவனிடம் போதலை விரும் பினையாயின் இப்பொழுதே நீ கருதியதைப் பெறுவாய். அவன் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கின்றான். அது வெற்றிக்கொடியையுடைய சிறந்த வாயிலையும், செல் வம் செழித்த கடைவீதியையும், மாடங்கள் நிறைந்த தெருக்களையும் உடைய மதுரைக்கு மேற்கில் உள்ளது. அங்கே சுனையில் மலர்ந்த மலர்களில் வண்டுகள் ஒலித்துக் கொண்டிருக்கும்."

இதில் முருகக் கடவுளின் தோற்றமும், தெய்வப் பெண்களின் தன்மைகளும், பேய் மகளின் இயல்புகளும், மதுரையின் சிறப்பும், திருப்பரங்குன்றத்தின் பெருமையும் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளன. முதலில் முருகக்கட வுளது தோற்றம் பாதாதிகேசமாக - அடிமுதல் முடிவரை யில் அழகாகக் காட்டப்பட்டுள்ளது. முதல் 3 வரிகளில்

முருகனின் தோற்றப்பொலிவு, உவமையுடன் திகழ்கிறது. உலகத்திலுள்ள உயிர்கள் மகிழும்படி எழுந்து மேருமலையை வலமாகச்சுற்றிவரும், பலரும் புகழ்கின்ற சூரியன் கீழ்க்கடலில் தோன்றினாற்போல நீக்கமின்றி எப்போதும் நெடுந்தூரம் சென்று விளங்குகின்ற ஒளியை யுடையவன் முருகன். சூரியன் புற இருளை நீக்குவதுபோல தன்னை மனக்கண்ணால் நோக்குவார்க்கு அக இருளாகிய அறியாமையை நீக்குகிறான். விடியற்காலையில் கடற்கரையில் நின்று பார்த்தால் சூரியன் செந்நிறமாயும் கடல்நீர் பல நிறங்களுடனும் விளங்கும். அதுபோல முருகனுடைய செம்மையும் மயிலின் பசுமையும் தோன்றும். சூரியன் நெடுந்தூரத்திலிருப்பினும் காண்பார்க்கு யாவும் தோன்றுதல்போல, முருகன் யாவற்றையும் கடந்து நிற்பினும் அன்புக்கண்ணால் நோக்குவார்க்கு அருள்புரிவான் என்பதும் விளங்குகின்றது. இவ்வகையில் முருகனுக்குச் சூரியனும் மயிலுக்குக் கடலும் உவமையாக வந்துள்ளன. இக்கருத்துக்களைக் கொண்ட வரிகளைப் பார்ப்போம் :—

> " உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
> ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி "

இனித் தெய்வப் பெண்களின் திருவுருவைக் காட்டும் சித்திரம் சிலவரிகளில் அமைந்துள்ளது. அதன் பொருள் :—

இவர்கள் கிண்கிணி அணிந்த அடிகளையும், திரண்ட கால்களையும், துவளும் இடையையும், மூங்கில் போன்ற தோள்களையும், இந்திர கோபப்பூச்சியின் நிறம் போன்ற சிவந்த ஆடையையும், பலமணிகள் கோத்த மேகலையையும், சாம்பூநதம் என்னும் பொன்னால் இயன்ற அணிகளையும், நெடுந்தூரம் கடந்து செல்லும் ஒளியையும், இயற்கை

அழகையும் உடையவர்கள். தாதியர் வகிர்ந்ததம் கூந்தலில் வெட்சி மலர்களின் இதழ்களைத்தூவி அதன்நடுவில் குவளைப்பூவின் இதழ்களைக் கிள்ளி இடுவர். சீதேவி, வலம்புரி, என்னும் தலையணிகளைச் சூடுவர். திலகம் அணிந்த நெற்றியில் சுறுமீனின் திறந்த வாய்போன்ற அணியைத்தொங்கவிடுவர். அழகாக முடித்த கொண்டையில் சண்பகப் பூவைச் செருகி அதன்மேல் மருதின் பூங்கொத்துக்களை இடுவர். செவ்வரும்பினால் கட்டியமாலையை கொண்டையில் பிணைப்பர். (இதுவும் பாதாதிகேச வர்ணனை) இக்கருத்துக்களைக் கொண்ட அடிகளைப் பார்ப்போம் :—

"கிண்கிணி கவைஇய ஒண்செம் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிறைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு
பைந்தாள் குவளைத் தூ இதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்துத்
திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள் இணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக"

இத்தகைய தெய்வப்பெண்கள் பலர்மந்தியும் ஏறியறியாத மரஞ்செறிந்த மலைச்சோலைகளில் கூடி விளாமரத்தின் தளிர்களைக்கிள்ளி ஒருவர்மேல் ஒருவர் எறிந்து ஆடிப்பாடி "வெற்றியையுடைய கோழிக்கொடி வாழ்வதாக" என்று கூறி வாழ்த்துவர்.

இவ்வாறே பேய் மகளின் இயல்புகளையும் கண்டோர் அஞ்சும்படி ஆசிரியர் அமைத்துள்ளனர். இனி மதுரையின் அக்கால நிலையைப் படமாகக் காட்டுகின்றார். கோபுர வாயிலில் வெற்றிக்கொடி பறக்கும். அதன் அருகில் நூலால்புனைந்த பந்தும் பாவையும் அறுப்பாரின்றித் தொங்கும். பகைவரை மகளிரைப்போல வலியிலராகக் கருதிப் பந்தும்பாவையும் வாயிலில் தொங்கவிடுதல் முற்கால வழக்கம். கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமின்றி வாணிகம் நடைபெறுவதால் திருமகள் உறையும் கடைத்தெருவையுடையது. மாடங்கள் மிக்க வீதிகளையுடையது. இவைகளைக் காட்டும் அடிகளைப் பார்ப்போம் :—

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடம் மதில்கூடல்"

இதற்கு மேற்கில் உள்ளது திருப்பரங்குன்றம். ஆங்கு அழகிய சிறகுகளையுடைய வண்டுகள் கரிய சேற்றில் மலர்ந்த தாமரைப்பூக்களில் இராப்பொழுது உறங்கி விடியற்காலையில் நெய்தற்பூவை ஊதிச்சூரியன் உதித்த பிறகு கண்போல் மலர்ந்த அழகிய சுனைப்பூக்களில் சென்று ஆர

வாரிக்கும். இன்னபெருமைகளையுடைய பரங்குன்றில் முருகன் வீற்றிருப்பான். இவற்றை உணர்த்தும் வரிகள் :—

" இருஞ்சேற்றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த,
முள்தாள் தாமரைத்துஞ்சி வைகறைக்,
கள்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்,
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்,
குன்றமர்ந் துறைதலும் உரியன் "

(மலர்கள் வண்டுகளுக்குத் தேனைக்கொடுத்து உதவுதல் போல முருகனும் அடியார்களுக்குத் திருவருள் புரிவான் என்பது குறிப்பு)

இனி ஆசிரியர் பக்தனை ஆற்றுப்படுத்தும் முறை மிகவும் போற்றற்குரியது. " புலவனே ! அளக்க இயலாத நல்ல புகழையும், சிவந்த வேலாயுதத்தையும் உடைய முருகன் திருவடிகளை நினைத்தலாகிய நல்மனதுடன் அவனிடம் போதலை நீ விரும்பினையாயின் நற்குணம் அமைந்த நல் உள்ளத்தில் தோன்றிய உன் விருப்பம் நிறைவேறும் படி நீ கருதியவைகளை இப்பொழுதே பெறுவாய். இதைக் காட்டும் வரிகளைப் பார்ப்போம் :—

" எய்யா நல் இசைச் செவ்வேற் சேய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கை புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை யாயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே."

## 2. திருச்சீரலைவாய்

சென்ற நிகழ்ச்சியில் முருகக் கடவுளின் முதல் இடமாகிய பரங்குன்றத்தின் இயல்புகளைப் பார்த்தோம். பெருமான் கோலத்தைக் கண்டோம். அவன் புகழைக் கேட்டோம். இனி அடுத்த பதியாகிய சீர் அலை வாய்க்குச் செல்வோம். சீர் அலைவாய் என்பது திருச்செந்தூர். இது செந்தில், செயந்திபுரம், சிந்துபுரம், நாமனூர் அலைவாய் எனவும் வழங்கும். கடல் வெள்ளத்தருகில் முருகப் பெருமான் கருணைவெள்ளமாய் எவ்வுயிருக்கும் தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய்த் தவிசில் வீற்றிருக்கின்றான். துன்ப அலைகளால் துயர்வுறும் உலக மக்கள் இன்ப வடிவமான இறைவனைத் தரிசித்து உய்வதற்கு அலைவாய்ப் பதியில் அமர்ந்துள்ளான். இத்தலம் இயற்கை எழில் மிகுந்த இடம். ஆலயத்துக்கு முன்னேயுள்ள சண்முக விலாசம் என்னும் திருமண்டபம். ஆறுமுகப்பெருமான் அருளைப் பெறுவதற்கு ஏற்ற இடமாய் அமைந்துள்ளது. தண்ணென வீசும் இளங்காற்றும், குன்றென மிளிரும் மணல் மேடுகளும், கலங்கரை விளக்கம் போன்ற உயர்ந்த கோபுரமும் காண்போர்க்கு எல்லையில்லாத இன்பம் அளித்து மண்ணில் விண்ணகரமாக விளங்குகிறது. இத் தலத்தின் பெருமைகள் அளவில்லாதன. ஆணவமே உருக் கொண்ட சூரபத்மனை வெல்வதற்குப் பெருமான் பாசறை அமைத்த இடம். முருகனது ஏவலுக்கிணங்கித் தேவர்கள் அமைத்த கோயில். இங்கிருந்து பெருமான் வீரவாகு தேவரைச் சூரபத்மனிடம் தூதனுப்பினர். அவன் சிறிதும் இணங்காமல் முருகனுடன் போர்புரிந்தான். பல உருவங் களை எடுத்தான். பெருமான் சம்மாரம் செய்துகொண்டே வந்தான். முடிவில் சூரபத்மன் சேவலும் மயிலுமாக வந்தான். முருகன் சேவலைக் கொடியாகவும், மயிலை

ஊர்தியாகவும் கொண்டான். முருகனைப் போற்றுவோர் சேவலையும் மயிலையும் சேர்த்து 'சேவலும் மயிலும் போற்றி' எனத் துதிக்கிறார்கள்.

குமரகுருபரர் ஐந்தாண்டு வரையில் ஊமையாயிருந்து செந்தூர்ப் பெருமான் அருளால் கந்தர் கலிவெண்பாவைப் பாடினார். மடைத் தொழில் புரிந்த வென்றிமாலை என்பார் கந்தப்பெருமான் அருளால் கவிராயராகித் திருச்செந்தூர்ப் புராணம் பாடினார். 'செந்தின் மாநகரந்தனில் மேவிய தேசிகனும். முருகேசன்' என்று அண்ணாமலை ரெட்டியார் அழகாகக் கூறியுள்ளார். அருணகிரிநாதரும், பல திருப் புகழ்ப் பாடல்களால் இப் பதியை அழகு படுத்துகின்றார். ஓர் இடத்தில் 'மங்களமா நகர் செந்தில்' என வழங்கியுள் ளார். மற்றும் பல அடியார்கள் பல பிரபந்தங்களைப் பாடிச் செந்திற் பதியைச் சிறப்பித்துள்ளார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் "நம் செந்தின் மேய வள்ளி மணாளன்" என்று முருகனை அழைக்கின்றார்.

வள்ளி மணாளன் அடியார்களுக்கு காட்சி அளிக்கும் முறையைப் பார்ப்போம். பெருமான் யானை வாகனத்தில் இனிதே அமர்ந்து வருகின்றான். "அறுமுகன் ஊர்திதானே யானையும் மயிலும்என்ப" என்றவாறு யானையும் வாகன மாக உள்ளது. யானையின் மத்தகம் அங்குசத்தால் வெட்டப்பட்ட ஆழ்ந்த புள்ளிகளை உடையது. அதன்மேல் நெற்றிப் பட்டமும், பொன்னரி மாலையும் அசைந்து கொண்டிருக்கும். பக்கங்களில் தாழ்ந்துள்ள மணிகள் மாறி மாறி ஒலிக்கும். யானையின் வலிமை யமனின் வலிமை போன்று பிறரால் தடுத்தற்கரியது. காற்று எழுந்தாற் போல் விரைந்து செல்லும் நடையை உடையது. இதனை

நாவலராகிய நக்கீரர் முருகாற்றுப் படையாம் மொழி மாலையில் அமைத்த அழகைப் பார்ப்போம் :—

“ வைந்நுதி பொருத வடு ஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையோடு துயல் வரப்
படும் மணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழம் மேல் கொண்டு ”

இனி அடியார்கள் இறைவனுடைய பெருமைகளைப் புகழும்போது செவிகளையும் போற்றுவது இயல்பு. திருஞான சம்பந்தர் தாம் பாடிய தேவாரத்தின் முதல் பதிகத்தில் ‘தோடுடைய செவியன்’ என்று போற்று கின்றார். அவ்வாறே முருகனுடைய செவிகளைத் துதிக்கும் முறையில் செவிகளில் திகழ்கின்ற குண்டலங்களைப் போற்றுகின்றார் நமது புலவர். முருகனது செவிகளில் ஒளி பொருந்திய மகரகுண்டலங்கள் அசைந்துகொண்டிருக்கும், அவை மிகவும் வேலைப்பாடு உடையவை. அவைகள் வானத்தில் விளங்குகின்ற சந்திரனை விட்டு நீங்காத வியாழன், வெள்ளி என்னும் நட்சத்திரங்களைப்போல் பிரகாசிக்கும். இதனை விளக்கச் சொல் ஒளியாய் அமைந்த வரிகளைப் பார்ப்போம் :—

“ நகைதாழ்பு துயல்வரூஉம் வகை யமை பொலம் குழை,
சேண் விளங்கு இயற்கை வாண் மதி கவைஇ,
அகலா மீனின் அவிர்வன இமைப்ப ”

இனி முருகக் கடவுளுக்குரிய முகங்கள் ஆறு. அவன் வீற்றிருக்கும் முக்கிய இடங்கள் ஆறு. அவன் மந்திரத்திற் குரிய எழுத்துக்கள் ஆறு. “ ஆறு திருப்பதிகண்டா றெழுத்து மன்பினுடன் கூறு மவர் சிந்தை குடி கொண் டோனே ” என்றார் குமரகுருபரர். பெருமான் ஆறுமுகன்

ஆனது எவ்வாறு எனப் பார்ப்போம். அசுரர்களுடைய துன்பத்திற்கு ஆற்ருத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டு ஒரு புதல்வனைத்தந்தருள வேண்டினர். சிவபெருமானும் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி ஆறுமுகம் கொண்டு வீற்றிருந்தான். இதை கந்த புராணம் அழகாய்க் கூறுகின்றது. "வந்திக்கு மலரோனுதி வானவருரைத்தல் கேளாப், புந்திக்குளிடர் செய்யற்க, புதல்வனைத்தருதுமென்ன, அந்திக்கு நிகர் மெய்யண்ணல் அருள்புரிந்தறிஞராயோர், சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்."

ஆறுமுகங்களாவன :—ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், அதோ முகம் என்பன.

இந்த ஆறு முகங்களும் அறிஞர்கள் சிந்திக்கும் முகங்கள் என்கிருர். இதை நக்கீரர் "தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார் மனனேர்பு எழுதரு வாள் நிறம்முகன்" என்று கூறுகிருர். அதாவது தவம் செய்யும் பெரியோர்களின் மனதில் பொருந்தும் முகங்கள் என்கிருர்.

சிவபெருமானுடைய ஆறுமுகங்களினின்றும் ஆறு தீப்பொறிகள் தோன்றிப் படிப்படியாக வந்து சரவணப் பொய்கையில் ஆறுகுழந்தைகளாகிப் பார்வதியால் ஒன்று சேர்க்கப்பட்டதும் கந்தன் எனப் பெற்ருன்! இவ்வாறு சங்கரனே சண்முகனுயினுன். சமயங்களை ஆறுவகையில் அடக்குவர் சான்ருேர். அவைகளுக்குரிய இறைவனுய், முத்திதரு வித்தாய் முருகன் விளங்குகின்ருன். இதை சிதம்பர சுவாமிகள் அழகாகக் கூறுகின்ருர். "ஆறுசமயக் கடவுள் வேறு வேறு இன்றி, யான் ஒருவனே அங்கங்கிருந்து அன்பர்க்கு முத்தி தருவித்தென்று யாவர்க்கும் அறிவித்த வதன மணியே."

"ஆறுமுகமான பொருள் நீ அருளல் வேண்டும்" என்கிறார் மற்றொருவர். நான்கு திசைகளும் மேல், கீழ் இடங்களுமாகிய ஆறுபகுதிகள் அடங்கிய உலகத்திற்கும் இறைவன் ஆறுமுகன் ஆகிக்காக்கின்றான் என்பர்.

முருகனது ஆறுமுகங்களும் கருணை கூர் முகங்கள் ஆகும். அவைகள் செய்யும் தொழில்களைப் பார்ப்போம். முருகக் கடவுளின் ஒருமுகம் மிக்க இருள் சூழ்ந்த உலகம் குற்றமில்லாமல் விளங்க பல கிரணங்களைத் தோற்றுவிக்கும். ஒருமுகம் அன்பர்கள் துதி செய்வதற்கு மகிழ்ந்து அவர்கள் வேண்டும் வரங்களை அளிக்கும், ஒரு முகம். மந்திரம் பொருந்திய வேதமுறையில் ஒழுகும் அந்தணர்கள் செய்யும் வேள்விகளில் தீங்கு நேராதபடி காக்கும், ஒருமுகம் வேதத்தின் உண்மைப் பொருள்களை, மறைந்த பொருள்களை ஆராய்ந்து இருடிகள் மகிழும்படி உணர்த்திப் பூரணசந்திரனைப்போல் திசைகளை யெல்லாம் விளங்கச் செய்யும், ஒருமுகம் போருக் கெழுந்த அசுரர் முதலியவர்களைக்கொன்று கோபம் கொண்ட உள்ளத்துடன் போர்க்களத்தை விரும்பிக் களவேள்விசெய்யும். இந்த ஐந்து முகங்களிலும் இறைவனுக்குரிய பஞ்சகிருத்தியங்களாகிய ஐந்து தொழில்களும் தனித்தனியே அமைந்து இருப்பதைக் காணலாம், ஆறுவது முகம் கொடி போன்ற இடையை உடைய குறவர் மடமகளாகிய வள்ளி யுடன் மகிழ்ச்சியைப் பொருந்தும். இம்முகம் போக நிலையைக்காட்டும். சக்தியும் சிவமும் ஆகிய பரம் பொருள் பெண்ணும் ஆணுமாகக் கோலங் காட்டி உயிர் களுக்குப் போகமூட்டும். இதனை "வையம் புணர்வுறு போகம் மூழ்கப் புருடனும் பெண்ணுமாகி மணவினை முடித்தான் அன்னான் புணர்ப்பை யார்மதிக்க வல்லார்" என்னும் திருவிளையாடல் வரிகளும், "போகியாயிருந்து

உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்" என்னும் சித்தியார் வாக்கும் வலியுறுத்தும், இத்தகைய பெரும் தத்துவங்களைக் கொண்ட முருகனது ஆறு திருமுகங்களையும் சொற்படமாகிய ஆற்றுப் படையில் புலவர் புனைந்த முறையைப் பார்ப்போம் :—

"மா இருள் ஞாலம் மரு இன்றி விளங்கப்
பல் கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர் வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழா அ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசை விளக்கும் மே—ஒருமுகம்
செறுநர்த் தேய்த்து செல் சமம் முருக்கிக்
கறுவு கொள் நெஞ்ச மொடு களம் வேட் டன்றே
ஒரு முகம் குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின்
மடவரல் வள்ளி யோடு நகை அமர்ந் தன்றே"

இனி முருகனது பனிரண்டு கரங்களும் ஆறு முகங்களுக் கேற்பத் தொழில்களைச் செய்யும் முறைகளை ஆராய்வோம். சூரியனுடைய முழுவெப்பத்தால் உயிர்களுக்கு உண்டாகும் துன்பத்தைப் போக்குதற்கு முனிவர்கள் அந்தச் சுடரோடும் ஆகாயத்தில் சுற்றிவந்து அவ்வெப்பத்தைக் குறைக்கின்றனர் என்பது வரலாறு. அவர்களுக்குப் பாதுகாவலாக ஒரு கை அமைந்து இருக்கும், எனவே சூரியன் வெப்பத்தைத் தணிக்கும் வகையில் ஒரு கை அமையும். அதற்கு இணையான கை பக்கத்தில் அமையும். மூன்ருவது கை அங்குசத்தால் யானையைச் செலுத்தும். அதற்கு இணையான கை அழகிய ஆடையை அணிந்த தொடையில் பொருந்தியிருக்கும். ஐந்தாவது

ஆறுவது கைகள் கேடயத்தையும், வேலாயுதத்தையும் வலமாகச் சுற்றிக் கொண்டிருக்கும். அசுரர்கள் வந்து வேள்வியைக் கெடுக்காமல் அவர்களை ஓட்டுதற் பொருட்டு இவ்விரண்டு கைகளும் தொழில்செய்யும். ஏழாவது கை முனிவர்களுக்கு உரைகடந்த உண்மைப் பொருள்களைக் குறிப்பாய் உணர்த்துவதற்குச் சின்முத்திரையாக மார்போடு சேர்ந்து விளங்கும். இதனால் வாயில்லாக் குடத்துள் நீர் நிறைந்தாற்போல ஞான ஒளி மாணவர்க்கும் நிறையும். சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தியாயிருந்து சனகாதி முனிவர்களுக்கு மோன முத்திரையால்—கைம்மலர்க் காட்சியால் பதிபசுபாசங்களின் இயல்புகளை உணர்த்தியது போல் இக்கரம் அமைந்திருக்கும். எட்டாவது கை மார்பில் தாழ்ந்துள்ள மாலையுடன் அழகு பெற விளங்கும். ஒன்பதாவது கை தொடி என்னும் அணியுடன் மேலே சுழன்று கள வேள்விக்கு முத்திரை கொடுக்கும். கீழ் உள்ள இதற்கு இணையான மற்றொரு கை இனிய ஓசையை உடைய மணியை மாறி மாறி ஒலிக்கச் செய்யும். பதினோராவது கை நீலநிறம் பொருந்திய மேகத்திலிருந்து, மழைத்துளிகளைப் பெய்விக்கும். அதற்கு இணையான மற்றொரு கை தேவப் பெண்களுக்கு மண மாலையைச் சூட்டும், இல் வாழ்க்கை இனிது நடத்துவதற்கு மழையும் மணமும் வேண்டப்படுவதால் இவ்விரு கைகளும் தமக்குரிய தொழில்களைச் செய்யும்- இவ்வாறு முருகப் பெருமானது பேருருவில்—விஸ்வ ரூபத்தில் பன்னிரு கரங்களும் ஆறுமுகங்களுக்கேற்பத் தொழில்களைச் செய்கின்றன. இவ்விதமாக உலகத்திற்கு உதவும் பன்னிரு கரங்களின் தோற்றத்தை ஆசிரியர் அமைத்துக் காட்டும் அழகைப்பார்ப்போம் :—

**'' விண் செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது**
**ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;**

நலம்பெறு கலிங்கத்துக்குறங்கின் மிசை அசைஇயது ஒருகை;
அங்குசம் கடாவ ஒருகை; இருகை
ஐ இருவட்டமொடு எஃகுவலம் திரிப்ப; ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளிபொழிய; ஒருகை
வான் அரமகளிர்க்கு வதுவை சூட்ட; ஆங்கு அப்
பன்னிருகையும் பாற்பட இயற்றி ''

இவ்வாறு நக்கீரர் இப்பகுதியில் திருச்செந்தூரின் சிறப்பையும், முருகனது ஆறுமுகங்கள், பன்னிரு கரங்களின் பெருமைகளையும், அவன் காட்சிதரும் முறையையும் இனிதாக எடுத்துக் காட்டுகின்றார்.

## 3. திரு ஆவினன் குடி

சென்ற நிகழ்ச்சியில் ஆற்றுப்படையின் 2-வது இடமான சீரலைவாயின் சிறப்பைப் பார்த்தோம். கடலருகே பெருமான் காட்சியளிப்பதைக் கண்டோம். அவன் பெருமைகளைக் கேட்டோம். கடற்காற்றுடன் அருட்காற்றும் வீசப் பெற்றோம். இனி அடுத்த பதியான ஆவினன் குடியை அடைவோம். இது இப்போது பழனியெனப் பிரசித்தமாய் விளங்குகிறது.

ஒருசமயம் நாரதர் சிவபெருமானை வணங்கும் பொருட்டுக் கயிலைக்குச் சென்றார். சுவைமிக்க மாதுளம் பழம் ஒன்றை இறைவனுக்கு அளித்தார். அப்போது பக்கத்தில் சிவகுமாரர்களான விநாயகரும், முருகனும் அமர்ந்திருந்தார்கள். பெருமான் இருவரையும் நோக்கி "உங்களில் எவர் விரைவில் வலம் வருகிறீரோ அவர் இப்பழத்தைப் பெறலாம்" என்றார். உடனே முருகன் மயில்மீதேறி வலம் வரப் புறப்பட்டார். விநாயகர் தமது இறைவனே உலகமாய் இருப்பதையுணர்ந்து அவரையே வலம் வந்து பழத்தைப் பெற்றுக்கொண்டார். முருகன் சுற்றிவந்து பார்க்கப் பழம் விநாயகர் கையில் இருக்கக் கண்டார். கோபம் கொண்டு புறப்பட்டார். அப்போது பார்வதியும், பரமனும் முருகனை நோக்கி " பழம் நீ, நீயே பழம்—சிவஞானப்பழம்" என்று போற்றி இனிய மொழிகளை அருளினர். முருகன் வந்து தங்கிய இடமே பழனி எனப் பெயர்ப் படுகிறது. இதைக் குறிக்கும் புராணப் பாட்டைப் பார்ப்போம்.

" கூறுடையாளுங் குன்றுக் குணப்பெருங் குன்று ஞானப்
பேறுடைப்பழநீ என்னப் பெயரது மருவியெங்கள்
ஆறுமா முகவன்வைகும் நகரமும் அன்று தொட்டு
வீறு தொல்பழ நீயென்றே விளம்பின உலகமூன்றும்"

இவ்வரலாறு பழநித்திருப்புகழ்ப் பாட்டிலும் காணப் படுகிறது.

இவ்விடத்தில் முருகப்பெருமான் யாவருக்கும் ஆண்டவனுய் ஞானப்பழமாக அவரவர் கருதும்அருட் கோலங் கொண்டு விளங்குகிருன். மலேமேல் மருந்தாய்த் தோன்றி மக்களுக்குற்ற உடற்பிணிகளேயும், உயிரைப்பற்றி நிற்கும் பாசப் பிணிகளேயும் போக்கி வருகிருன். பெருமானின் திருமுகம் அருள்கனிந்த நோக்கமும், புன்னகை தவழும் புனிதவாயும், மணி திகழும் திருமார்பும், தண்டந்தாங்கிய திருக்கரமும், இடுப்பில்வைத்த இடக்கையும், தாமரை செறிந்த திருஅடிமலர்களும், காண்போரைப் பரவசம் அடையச் செய்யும். இவ்வாறே அடிவாரத்திலுள்ள ஆவினன் குடிக்கோயிலில் பெருமான், மயில் மீது அமர்ந்து குழந்தை வேலனுகக் காட்சி கொடுக்கிருன்.

இப்பெருமானேயே நமது நக்கீரர் ஆற்றுப்படையின் 3-ம் பகுதியில் போற்றியுள்ளார். முன்காலத்தில் ஆவி என்னும் குடியினர் ஆண்டமையால் ஆவினன் குடி என்றும், பொதினியென்றும், முருகன் சித்தவடிவங் கொண்டு உறைவதால் சித்தன் வாழ்வென்றும், அறுமுகச் செம்பொருளான சிவம் வாழ்வதால் சிவகிரி என்றும் பெயர்கள் வழங்கும். அருணகிரிநாதர் பலதிருப்புகழ்ப் பாக்களால் சிறப்பித்துள்ளார். ஓர் இடத்தில் "தீபமங்கள ஜோதி நமோ நம" என்கின்ருர். அதற்கு அறிகுறியாகத் தற்போதும் மலேக்காட்சி இரவில் மின்னெளி விளக்குகளால் பிரணவம்போல் திகழ்கின்றது. இத்தலத்தைப் பற்றிய பலதமிழ்ப் பிரபந்தங்கள் உள்ளன.

முருகப்பெருமான் அசுரர்களே அழித்து இந்திரன் மகளாகிய தெய்வயானேயை மணந்து வீற்றிருக்கும்போது

தம்கையிலுள்ள ஞானசக்தியாகிய வேலாயுதத்தை நோக்கி "நமக்கு எல்லாம் தந்தது இவ்வேல்" என்று கூறினர். அப்போது அருகிலிருந்த பிரமன் "இவ்வேலுக்கு இப் பெருமை நம்மால் ஏற்பட்டது" என்றான். உடனே முருகன் "நம் கை வேலுக்குப் பெருமை கொடுப்பவன் நீயோ?" என்று வெகுண்டு "இங்ஙனம் தகாது பேசிய நீ பூலோகத்தைச் சேர்க" என்று சாபமிட்டான்.

இதனால் பிரமனுக்குப் படைத்தல் தொழில் இல்லை யாக, இதனால் திருமாலுக்கும் அரனுக்கும் காத்தல் தொழி லும், அழித்தல் தொழிலும் இல்லையாயின, முத்தொழி லும் நடைபெறுமையால் கடவுளர் மூவரும் தத்தம் தொழிலை இயற்றவும், பிரமனைப் பழய நிலையில் அமர்த்த வும் கருதி முனிவரும், கந்தர்வர்களும், திருமாலும், ருத்திர னும், இந்திரனும், தேவர் முப்பத்துமூவரும் பதினெட்டு வகை தேவகணங்களும் ஆகாய வழியே வந்து முருகப்பெரு மானிடம் தங்கள் குறைகளை நீக்கும்படி வேண்டிக்கொள் கிறார்கள். இவர்களுடைய வரிசைகளில் முன்னே முனி வர்கள் நிற்கிறார்கள்.

உலகம் நடைபெறுவதற்கு முக்கியமானவர்கள் முனி வர்கள். தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளர்கள், புல னடக்கம் பூண்டவர்கள். நிறைமொழி மாந்தர்கள். இறைவன் முன்னிலையில் மற்றையோரைவிட மாண்புடை யோர்கள். இவர்கள் மொழிகளை இறைவனும் தட்ட மாட்டான். இதனாலேயே முன்னே சென்றனர் முனிவர், இவர்கள் கோலங்களை நூல்மூலம் பார்ப்போம்,

இவர்கள் மரவுரியை உடையாகத் தரித்தவர்கள், வலம்புரிச்சங்கைப் போன்ற வெள்ளிய நரைமுடியை

உடையவர்கள். அழுக்கின்றி விளங்கும் திருமேனியை யுடையவர். மான்தோலைப் போர்த்தும், தசைகெட்டது மான மார்பில் எலும்புகள் வரிசையாகத் தோன்றும் படியான உடலையுடையவர்கள். 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி' என்னும் திருவாசகத்தின்படி அருள் ஞானம் பெற்றோர்களின் உடல் மெலிந்தும் ஞானம் மிகுந்தும் காணப்படும். பலநாட்கள் உணவின்றியே உபவாசமிருந்து கழித்தவர். மாறுபாட்டையும் பகைமையையும் நீக்கியவர். கற்றோரால் அறியப்படாத இயற்கை அறிவை உடையவர். கற்றோர்க்குத் தாமே அறிவு வரம்பில் நிற்பவர். அவாவுடன் கடும் கோபத்தையும் விலக்கியவர். மெய்வருத்தம் உண்டானவிடத்தும் மனதினால் வருந்தாத இயல்பையுடையவர். ஏனெனில் உடம்பு இடும்பைக்கே இலக்கம் என்று அறிந்தவர்கள். வெறுப்பில்லாத நல்ல அறிவையுடையவர், இத்தகைய சிறந்த பண்புகளைக் கொண்ட முனிவர்களின் தோற்றத்தை நக்கீரர், ஆற்றுப் படையாம் படத்தில் காட்டிய அழகைப் பார்ப்போம் :—

"சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால் நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம் வரம்பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முன்புக"

இனி முனிவர்களை அடுத்துச் செல்பவர் கந்தர்வர். இவர்கள் இசையில் வல்லவர்கள். முருகப் பெருமானின் கோபத்தை இன்னிசையால் போக்கலாமெனக் கருதிச் செல்கின்றனர். கோபம் கொண்டவர் இசையால் மனம்மாறி வசமும் ஆவர். முன்னம் சிவபெருமானின் கோபத்தை நாரதர் யாழின் இசையால் மாற்றியதும், இராவணன் இன்னிசை பாடி சிவபிரானை மகிழ்வித்து அருள் பெற்றதும் புலனாகும். பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக மண் இன்றிவிண் கொடுக்கும் மணிகண்டன்' என்பது ஆன்றோர் மொழி. இவ்வாறே கந்தர்வரும் யாழின் இசையுடன் செல்லுகின்றனர்.

இவர்கள் புகையை முகந்தாற்போன்ற அழுக்கில்லாத தூய உடையைத் தரித்தவர். மொட்டுகள் வாய்நெகிழப் பெற்ற மலர்மாலையை மார்பில் அணிந்துள்ளவர். செவியால் சுருதியை அளந்துகட்டிய நரம்புகளையும், பொருந்திய வார்க்கட்டினையும் கொண்ட நல்ல யாழையுடைவர். அன்பு நிறைந்த மனதையுடையவர். எப்போதும் யாழுடன் பழகுவதால் யாழின் ஒலிபோன்ற மென்மையான இனிய சொற்களையே பேசுபவர். இத்தகைய கந்தர்வர் யாழின் இனிய நரம்புகளை வாசித்துச் செல்லுகின்றனர். இவர்களை நக்கீரர் நமது மனக்கண்முன் காட்டும் முறையைப் பார்ப்போம் :—

"புகை முகந்தன்ன மாசில் தூவுடை
முகைவாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மெல் மொழி மேவலர் இன்நரம்பு உளர"

இவர்களுக்குப் பின்னே கந்தர்வப் பெண்களும் செல்கின்றார்கள்.

“ நூற்றுப்பத்தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்விமுற்றிய வென்றடு கொற்றத்து
ஈர்இரண்டேந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்தயானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும் ”

இனி இவர்களுக்குப் பின்னே தேவர் முப்பத்து மூவரும், பதினெண் தேவகணத்தாரும் செல்கின்றனர். எனவே முனிவர் முதலாகத் தேவர்கள் ஈருக உள்ள அனை வரும் விண்ணில் மீன் பூத்ததுபோலத் தோன்றினர்; காற்று எழுந்தாற்போல் விரைந்து செல்லுகின்றனர். இவர்களுடைய குறைகளைப் போக்கியருளும் வகையில் முருகப்பெருமான் அருட் கற்பினையுடைய தெய்வயானை யம்மையுடன் ஆவினன்குடி என்னும் பழனியம்பதியில் வீற்றிருக்கின்றான்.

# 4. திருவேரகம்

சென்ற நிகழ்ச்சியில் முருகன் உறையும் மூன்றும் படைவீடான ஆவினன் குடியின் அழகைப் பார்த்தோம். அவன் பெருமைகளைக் கேட்டோம். அவன் கனியாய் விளங்கும் காட்சியைக் கண்டோம். இனி அடுத்துள்ள பேரகமாகிய ஏரகப்பதிக்குச் செல்வோம். இது திரு என்னும் அடை பெற்றுத் திருவேரகமாயிற்று. ஏரகமென்பது சுவாமி மலை. இதை "காவிரி புறம்பு சுற்றும் ஏரகம் அமர்ந்த பச்சை மயில் வீரா" என்று அருணகிரியார் கூறுவர். இனி ஏரகமென்பது மலை நாட்டிலுள்ள ஓர் திருப்பதி என்பர் உரை ஆசிரியர். இவ்விடத்தில் முருகப் பெருமான் குடிலைப் பொருளாய்—தாரகவடிவமாய்—பிரணவ நிலையாய் வீற்றிருக்கின்றான். இதைக் கந்தபுராண ஆசிரியர் "தாரகத்துருவமாம் தலைமை எய்திய ஏரகத்தறு முகனடிகள் ஏத்துவாம்" என்று அழகாகக் கூறுகின்றார்.

பிரமன் படைப்புத் தொழிலுக்குத் தலைவன். அவன் வேதங்களை முறைப்படி ஓதுபவன். வேதங்களுக்கு முடியாய் விளங்குவது பிரணவம் இது ஓம் எனப்படும். இதை மந்திரங்களில் சேர்த்துக் கூறுவர். ஒரு சமயம் முருகப் பெருமான் பிரமனை அழைத்துப் பிரணவத்துக்குப் பொருள் கூறுமாறு ஏவினன். அவனால் பொருள்கூற முடியவில்லை. அதன் காரணமாகப் பிரமனைச் சிறையில் விட்டான். தேவர்கள் எல்லோரும் பெருமானிடம் வந்து பிரமனைச் சிறையிலிருந்து மீட்கும்படி வேண்டினர். பிரமனை வெளியேற்ற முடியவில்லை. முடிவில் தந்தையான சிவபெருமானே முருகனிடம் வந்து பிரமனைச் சிறையிலிருந்து விடுவித்தான். அப்போது சிவபெருமான் முருகனை நோக்கிப் பிரணவப் பொருளை விளக்க வேண்டினன். அவ்வாறே பெருமான் சிவபெருமானுக்குக் குடிலைப்

பொருளை மறைமுகமாக உபதேசித்தான். பரமனும்கேட்டு மகிழ்ந்தனன். இதை "தன் திருச்செவியை நல்கச்சண்முகன் குடிலை என்னும், ஒன்றெரு பதத்தின் உண்மை உரைத்தனன்" என்று கந்தபுராணம் கூறுகின்றது. மற்றைப் பெரியோர்களும் இந் நிகழ்ச்சியைப் போற்றிப் பாடியுள்ளார்கள். "ஈசருடன் ஞானமொழி பேசு முகம் ஒன்றே" என்பர் அருணகிரியார். "பொன்னங்கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் மொழிந்தோனே" என்று குமரகுருபரர் கூறுகிறுர்." மினலலீனய இடைமாது இடமருவுகுருநாதன் மிக மகிழ அனுபூதியருள்வோனே" என்று திருப்புகழ் கூறும். "குரு மூர்த்தியாய்க் குடிலை கூறியிட்ட உன்னை" என்று மற்றெருவர் கூறுகின்றுர். ஓர் ஆசிரியர் "கோயிலுனக்கு ஏரகமோ எங்கணுமோ என்னெஞ்சமோ" என்கின்றுர். சொக்கநாதப் புலவர் மோட்ச இன்பத்தை வேண்டும் வகையில் ஏரகப் பெருமானைப் பார்த்து "மங்காத சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம் ஏரகத்துச் செட்டியாரே" என்று பாடுகின்றுர். "என்றனை ஆளும் ஏரகச் செல்வ" என்கிறுர் தேவராயர்.

இத்தகைய பெருமைகளை யுடையது ஏரகப்பதியாகும். ஆற்றுப்படை அருளிய நக்கீரர் இப்பதியைக் குறித்துப் பாடிய பாட்டில் அடங்கிய பொருள்களை ஆராய்வோம். இப்பகுதியில் அந்தணர்களின் அரிய குணங்களையும், அவர்கள் முருகனை வழிபடும் முறையையும் அடுக்கிக் காட்டுகின்றுர் ஆசிரியர். இவர்களுக்குரிய தொழில்கள் ஆறு. அவை வேதம் ஓதுதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல், எளியோர்க்குக் கொடுத்தல், யாசித்தல் என்பன. இவ்வித குணங்களிலிருந்து தவருதவர்கள். இதை "இருமூன்றெய்திய

இயல்பினின் வழாது" என்கின்றார். இவர்கள் மிகப் பழமையான குடியில் தோன்றியவர்கள். தாயும் தந்தையு மாகிய இருவரது குலத்தையும் உலகத்தார் நன்றென்று மதிக்கத் தக்க குலத்தில் உதித்தவர்கள். இதை நக்கீரர் "இருவர்ச்சுட்டிய பல்வேறு தொல்குடி" என் கின்றார். உலக வாழ்க்கையில் மனிதர் செல்லவேண்டிய நெறிகள் நான்கு. அவை பிரமச்சரியம், கிரகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் என்பன. இவைகளைத் தமிழில் மாணவநிலை, இல்லறநிலை, வனநிலை, துறவுநிலை என்பர். பிரமச்சரியம் என்பது நல்லாசிரியரை அடுத்து வேதம் ஓதி விரதங் காத்து விவாகமின்றி இருப்பது. இதற்குரிய பருவம் இளமைப்பருவம், இப்பருவத்துக்குள்ள ஆண்டு கள் அக்கால வழக்கப்படி நாற்பத்தெட்டு ஆண்டுகள் ஆகும். பிரமச்சரிய நெறியே பிறநெறிகட்கெல்லாம் அடிப்படையானது. அந்நெறியில் புறத்தே செல்லும் ஆசைகளை அடக்கி கற்கவேண்டிய நூல்களைக் கற்று, கற்றபடி ஒழுகி ஆசான் பணித்த நெறியில் நின்று அப் பருவத்தைக்கழிக்க வேண்டும். மனம், மொழி மெய்களைத் தீய நெறியில் செல்லவிடாது, தூயநெறியில் செல்லச் செய்யவேண்டும். இதுவே அடக்கம் எனப்படும். "இளை யான் அடக்கம் அடக்கம்" என்பர் ஆன்றோர். இப்பரு வத்தில் உடல் உறுப்புக்கள் யாவும் தம்தம் தொழில்களைச் செவ்வனே செய்யும் நிலையில் அமைந்திருக்கும். எனவே அந்தணர்கள் பிரமச்சரியத்திற்கு உரிய இளமைப் பரு வத்தை நன்னெறியில் கழிக்கின்றார்கள். வேதம் முதலிய அறநூற் கருத்துக்களை எப்போதும் கூறுகின்ற கொள்கை களையுடையவர்கள். இளமைப் பருவத்தை நல்வழியிற் செலவிடுவதால் நல்யாண்டு எனப்படுகின்றது. இதை ஆசிரியர் "அறுநான்கிரட்டி இளமை நல்யாண்டு ஆறினிற் கழிப்பிய அறனவில் கொள்கை" என்கின்றார்.

இனி அந்தணர்களுக்குரிய ஆறு தொழில்களில் வேள்வி செய்தல் ஒன்று. வேள்வி என்பது ஓர் பயனை விரும்பிச் செய்யும் அழல் வழிபாடு. உலகச் செயல்கள் நடைபெறுவதற்கும், உயிர்கள் நலம் பெறுவதற்கும் தீமைகள் நீங்குவதற்கும், வேள்வி செய்வதுண்டு. திருஞான சம்பந்தர் சிதம்பரத்தைப் போற்றிப் பாடுங்கால் "கற்றுங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லை" எனப் பாடுகின்றார். அப்பர் சுவாமிகள் அந்தணரான அப்பூதியடிகளைப் போற்றுங்கால் "அஞ்சிப் போய் கலிமெலிய அழல் ஓம்பும் அப்பூதி" என்கின்றார். இத்தகைய வேள்வி மூன்று விதமாகச் செய்யப்படும். சதுரம், முக்கோணம், வில்வடிவம் என்னும் மூன்று வடிவங்களில் அமைக்கப்படும். இவை காருகபத்தியம், ஆகவனீயம் தட்சிணாக்கினியம் எனப்படும். சித்தன்வாழ்வென்னும் பழனியை ஔவையார் புகழ்ந்து பாடும்போது "சித்தன் வாழ்வில்லந்தோறும் மூன்றெரியுடைத்து" என்கின்றார். இத்தகைய மூன்று வகை வேள்விச் செல்வத்தை ஏரகத்திலுள்ள அந்தணர்கள் எப்போதும் வளர்த்து வருகின்றார்கள். இதை ஆசிரியர் "மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து" என்கின்றார். அந்தணர்க்குள்ள பல பெயர்களில் இருபிறப்பாளர் என்பது ஒன்று, அவர்கள் இரண்டு பிறப்பினை உடையவர்கள். எல்லோர்க்கும் இயற்கையாயுள்ள ஓர் பிறப்பும், பூணூல் பூண்டு காயத்திரி மந்திரத்தைப் பெறத்தக்க ஞானப்பிறப்பும் ஆகிய இரு வகைப் பிறப்பையுடையவர்கள். இவர்கள் தம் உடம்பில் பூணூலை அணிந்துள்ளனர். அது ஒன்பது இழைகளைக் கொண்ட மூன்றுபுரிகளையுடையது. ஒவ்வொன்றும் மூன்று இழைகளைக் கொண்டது. மூன்று புரிகளும் மும்மூர்த்திகளையும், சத்துவம் முதலிய மூன்று குணங்களையும் குறிக்கும் என்பர் ஆன்றோர். பொதுவாக நூலானது பொருள்களின் புறத்தே உள்ள கோணல்களை நீக்கிக் காட்டுவதுபோல வேதம் முதலிய நூல்கள் மாந்

தரின் மனக்கோணல்களை—மனக்குற்றங்களை—அஞ்ஞானங்களை நீக்கும் என்பர். எனவே பூணூல் சில நுட்பமான தத்துவங்களை உணர்த்தும் வகையில் அங்கமாகத் திகழ்கின்றது. மேலும் இவர்கள் நீராடும்போது நனைந்த ஆடையை உடம்பில் உடுத்தியுள்ளார்கள். உடம்பிலிருந்தவாறே உலரும்படி ஈர உடையைத் தரித்துள்ளார்கள். இதை நமது ஆசிரியர் "ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண், புலராக்காழகம்புலர உடீஇ" என்கின்றார்.

இனி இவர்கள் முருகனை வழிபாடுசெய்யும் முறையைக் காட்டுகின்றார். இறைவன் மக்களுக்கு உடலைக் கொடுத்தது அவனை வணங்குதற்காகவே என்பர். "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை" என்று அப்பர் பாடுகின்றார். எனவே இவர்கள் தங்கள் கரங்களைத் தலைக்குமேல் தூக்கி வணங்குகின்றார்கள். வாக்கினால் செய்யும் வழிபாடு துதியும் மந்திரமும் ஆகும். இதை அப்பர் சுவாமிகள் "கற்றுக்கொள்வனவாயுள நாவுள" என்கின்றார். வாயினால் சொல்வது தோத்திரமாகும். இது பிறர் கேட்கும்படி சொல்வது. நாவினால் நவில்வது மந்திரமாகும். பிறர் கேட்காதபடி உச்சரிப்பது. இது குருவின் மூலமாய்க் கேட்கப்படுவது. முருகனுக்குரிய மந்திரம் ஆறெழுத்தாலாகியது. அது சடாட்சரம் எனப்படும். இவ்வெழுத்துக்களைப் பலவாறுகச் சொல்வர் ஆன்றோர். ஏரகத்திலுள்ள அந்தணர்கள் தாங்கள் அருமையாய்க் கேட்டறிந்த சடாட்சர மந்திரத்தை நாவானது அசைகின்ற அளவில் உச்சரிக்கின்றார்கள். அவர்களுடைய நாவானது மந்திரத்தைச் சொல்லிச் சொல்லிப் பயின்றுள்ளது. அவர்கள் மறந்தாலும் அவர்களுடைய நா—மறப்பதில்லை. இம்முறையைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே" என்கின்றார். இவ்வாறே அந்தணர்கள் முருகனுக்குரிய மூல மந்திரத்தை முறைப்

படி உச்சரிக்கின்றார்கள். இக்கருத்துக்களைத் தொகுத்து நமது ஆசிரியர் "உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து, ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வி, நா இயல் மருங்கின் நவிலப்பாடி" என்கின்றார். இனி இவர்கள் முருகனைப் பொழுதறிந்து வழிபடுகின்றார்கள். அதாவது உதயகாலமாகிய காலையிலும், நண்பகலிலும், அத்தமன காலமாகிய மாலையிலும் வணங்குகிறார்கள். இவர்கள் முருகனை மணமிக்க மலர்களால் அர்ச்சிக்கின்றார்கள். முருகனுக்குரிய மலர் கடப்ப மலர் என்பர். இது தேர் உருள் போன்று வட்டமாய் இருக்கும். இறைவனைப்புறமலரால் அர்ச்சனை செய்யச் செய்ய அகமாகிய—உள்ளமாகிய மலர் விரியும் "மலர் மிசை ஏகினான்," என்றும். "அன்பர் அகத்தாமரையில் வீற்றிருக்கும் தெய்வ விளக்கொளியே" என்றும் ஆன்றோர்கள் அருளியுள்ளார்கள். இவ்வாறான வழிபாட்டுக்கு மிகவும் மகிழ்ந்து ஏரகம் என்னும் பேரகத்தில் முருகப்பெருமான் இனிது வீற்றிருக்கின்றான். இத்தகைய சிறந்த கருத்துக்களைத் தொகுத்து நக்கீரர் அமைத்த முழுப் பாட்டைப் பார்ப்போம் :—

" இருமூன்று எய்திய இயல்பினில் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த மூத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன் ; அதா அன்று,"

# 5. குன்றுதோருடல்

சென்ற பகுதியில் ஏரகப் பகுதியின் எழிலைக் கண்டோம். அவ்விடத்தில் முருகப்பெருமான் தாரக வடிவமாய் விளங்குவதையும், அந்தணர்கள் அவனை வழிபடும் முறைகளையும் பார்த்தோம். இனி அடுத்தபகுதியாகிய குன்றுதோருடலுக்குச் செல்வோம். குன்று தோருடல் என்பது முருகன் குன்றுகள் தோறும் எழுந்தருளியிருத்தல். ஆற்றுப்படையின் பிற இடங்கள் தனிப்பட்ட தலங்கள். ஆனல் குன்றுதோருடல் என்பது முருகனுக்குரிய பொது இடம் ஆகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களில் குறிஞ்சி என்பது மலையும், மலையைச் சேர்ந்த இடமும் ஆகும். முருகன் குறிஞ்சி நிலத்தலைவன் ஆவன் "சேயோன் மேய மைவரை உலகமும்" என்பதும், "விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" என்பதும் இதனை விளக்கும். எனவே கோயில்களைக் கொண்ட குன்றுகளும், பிற குன்றுகளும், குன்றுதோருடலில் அடங்கும். "வடிவதாம் மலையாவையும் மேவிய தம்பிரானே" என்று திருப்புகழ் கூறுகின்றது. புறத்தே உள்ள குன்றுகளில் முருகன் தங்கிக் காட்சி தருவது போலவே குணக்குன்ருகிய மெய்யன்பர்களின் அகமாகிய— உள்ளமாகிய குன்றினிடத்தும் அமர்ந்து அருள் செய்கின்றன். அருணகிரிநாதர் கந்தர் அனுபூதியில் "திணியான மனேசிலைமீது உனதாள் அணியார் அரவிந்தம் அரும்பு மதோ" என்று அழகாகக் காட்டியுள்ளார். மற்ருேர் பக்தர் சிவபெருமானிடம் 'நீங்கள் குடும்பத்துடன் என் மனமாம் மலையில் வந்து அமரவேண்டும்' என வேண்டுகின்ருர். மலைகள் வேதங்களை உணர்த்துவதாகக் கூறுவர் ஆன்ருேர். வேதங்கள் மலை உருவாய்த் தாங்குவதால் திருக் கழுக்குன்றம் வேதகிரி எனப்படும். முருகப்

பெருமான் குன்றுகளில் தங்கியிருப்பது போலவே வேதக் குன்றிலும் தங்கியிருக்கின்முன். இதை அருணகிரியார் " தமிழ் வேத வெற்பில் அமர்ந்த கிருபாகரா " என்கிருர். இதனுல் வேதத்தின் முடிந்த பொருளாய்ப் பெருமான் விளங்குகின்முன் என்பது புலப்படுகிறது. மலையிலிருந்து ஆறுகள் ஓடிவருவது போல பெருமானது கருணை வெள்ளமும் உண்மை யடியாரிடத்தில் ஓடிப்பாயும். " மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும் " என்றவாறு மலைமேல் உறையும் முருகன் பிறவிப் பிணியை மாற்றும் மலை மருந்தாக விளங்குகிருன். இத்தகைய பெருமைகளையுடைய குன்றுகளில், குன்றவர் முருகனை வழிபடும் முறைகளை ஆசிரியர் நக்கீரர் அமைத்துக் காட்டும் அழகைப் பார்ப்போம். முதலில் வேலன் ஒருவன் வருகிருன். இவன் படிமத்தான், தேவராளன், கோயிற்பூசாரி எனப் பெயர் பெறுவன். கையில் வேலைப் பிடித்து ஆடுவதால் வேலன் எனப்படுவான். இவன் முருகனுடைய ஆவேசம் பெற்று ஆடிக் குறி முதலியன சொல்வான். இவ்வாறு ஆண்களும் பெண்களும் ஆவேசம் ஆடிக் குறி சொல்லும் வழக்கம் தமிழ் நூல்களில் காணப்படுவதுண்டு. இவ்வேலன் பச்சிலைக் கொடியிலே சாதிக்காயை இடையே இட்டுப்புட்டில் போன்ற தக்கோலக் காயைக் கலந்து காட்டுமல்லிகையுடன் வெண் தாளியைச் சேர்த்துக் கட்டிய கண்ணியை—மாலையைத் தலையில் அணிந்துள்ளான். இவ்வேலன் தோற்றத்தை ஆசிரியர் வரைந்து காட்டும் வரிகளைப் பார்ப்போம் :—

**" பைங் கொடி நறைக்காய் இடை இடுபு வேலன்**
**அம் பொதிப் புட்டில் விரை இக் குளவியொடு**
**வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன்."**

இனிக் குன்றவராகிய கானவரும், மகளிரும் தங்களைப் பலவாறு அழகாக அலங்கரித்துக்கொண்டு குரவைக்கூத்து ஆடுவர். குரவை என்பது எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைகோத் தாடுங் கூத்து. கானவர் தங்கள் மார்பில் நிறம் விளங்கும்படி நறுமணமுள்ள சந்தனத்தைப் பூசியிருப்பர். கொலைத் தொழிலைச் செய்யும் கொடுமையான வில்லைக் கையில் தாங்குவர். நீண்டு வளர்ந்த மூங்கிற் குழாய்களில் கள்ளைப்பெய்து முற்ற விட்டு அதன் தெளிவை சிற்றூர்களிலுள்ள தங்கள் சுற்றத்தாருடன் உண்டு மகிழ்வர். அப்பொழுது குறிஞ்சி நிலத்துக்குரிய தொண்டகம் என்னும் பறை ஒலிக்கும். அதன் தாளத்திற்கேற்ப குரவை ஆடுவர். இதில் பெண்களும் சேர்ந்துகொள்வர். இவர்கள் ஆழமான நீர் நிலையிலுள்ளதாயும், விரலால் தடவப் பெற்று மலர்ந்து வேறுபடுகின்ற மணமுள்ளதாயும், வண்டுகள் மொய்ப்ப தாயும் உள்ள கண்ணியை—தலை மாலையையும், பூ இதழ்களைப் பறித்துத் தொடுத்த மாலையையும் தங்கள் கூந்தலில் சேர்த்துக் கட்டியிருப்பர். இடுப்பில் ஓர் வகைத் தழை உடையை அணிந்திருப்பர். தழை என்பது பலவகைப் பூக்களை இடையில் வைத்து மரஇலைகளால் தொடுக்கப் பட்ட உடை. இதில் கஞ்சங் குல்லை இலையும், நறுமணமுள்ள பூங்கொத்துக்களும், சிவந்த கால்களையுடைய கடப்பமரத்தின் வெண்மையான பூங்கொத்துகளும் கலந்து பார்வைக்கு அழகாகத் தோன்றும். இதில் வண்டுகள் தேனை உண்ணும்படி மொய்த்திருக்கும். இத்தகைய தழை ஆடையைப் பெண்கள் மணி வடங்கள் பூண்ட தம் இடுப்பில் அணிந்திருப்பர். இவர்கள் மயிலைக் கண்டாற்போன்ற மென்மையான சாயலையுடையவர்கள். அழகிய நடையை உடையவர்கள். இத்தகைய அழகிய

கோலத்துடன் பெண்களும் சேர்ந்து குரவைக் கூத்து ஆடுவர். இவைகளை அமைத்து ஆசிரியர் அமைத்த சொற்படத்தைப் பார்ப்போம் :—

" நறும் சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந் தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடு அமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல் உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலை உடை நறும்பூச்
செங்கால் மராத்த வால் இணர் இடை இடுபு
சுரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில் கண்டு அன்ன மடநடை மகளிரொடு "

இனி யாவற்றையுங் கடந்து அருவாய் நிற்கும் பரம்பொருளாம் இறைவன் மனப்பண்பட்ட மக்களுக்கு அருள் செய்யவேண்டி உருவத் திருமேனிகொண்டு காட்சி கொடுப்பான். இதை " அருள் வடிவுந் தானுமாய் ஆண்டில னேல் அந்தப் பெருவடிவை யாரறிவார் பேசு " என்று சித்தாந்த நூல் கூறும். இவ்வாறே ஈசனின் வேறாகாத முருகனும் தன்னை வழிபடும் அடியார்களுக்குக் காட்சி கொடுக்கின்றான். அவன் காட்சிதரும் முறையைப் பார்ப்போம். முருகன் சிவந்த மேனியை உடையவன். அவனுடைய செம்மை நிறம் யாவரும் விரும்பும் தன்மை யுடையது. புறத்தே தோன்றும் செம்மை இருளை நீக்குவது போல் முருகனுடைய செம்மைத் தோற்றம் அடியார்களின் அக இருளைப் போக்கி ஞானத்தைப் பெருக்கும். இதனால் முருகனுக்கு செவ்வேள் என்றும், செய்ய வேள் என்றும் பெயர்கள் உண்டு. அவனுடைய ஆடையும் செந்நிறம், சிவந்த அடிப்புறத்தை உடைய அசோக மரத்தின் குளிர்ந்த

தளிர்கள் அவன் காதில் அசைந்து கொண்டிருக்கும். இடுப்பில் கச்சையையும், காலில் கழலையும் அணிந்திருப்பான். வீரத்திற்கும் வள்ளல் தன்மைக்கும் அடையாளமாக காலில் கழல் அணிவதுண்டு. வீரருள் வீரனுவன் வேலுடை முருகன். பொருளை வழங்கும் வள்ளலைப் பார்க்கிலும், அரிய அருளை வழங்கும் வள்ளலாக முருகன் விளங்குகின்றான். சிவந்த காம்புகளையுடைய வெட்சிப் பூமாலை அவன் முடியில் விளங்கும். புறப் பொருள் இலக்கணத்தில் வெட்சி சூடுதல் என்பது பகைவருடைய பசுக்கூட்டங்களைக் கவர்தல். இங்கு பசுக்களாகிய உயிர்களின் உள்ளங்களைக் கவர்தலாம். 'உள்ளங் கவர் கள்வன்' என்று சிவபெருமான் அழைக்கப்படுகிறான். துளையை உடைய குழல் வாத்தியத்தையும், வளைந்த ஊது கொம்பையும், வேறுபல இசைக் கருவிகளையும் இவன் ஊதுவன். ஆட்டுக்கிடாயைப் பின்னிட்டு மயிலை வாகனமாகக் கொண்டு குற்றமில்லாத கோழிக் கொடியை உயர்த்திப் பிடித்திருப்பன். நாரதர் ஒரு வேள்வி செய்தார். அதினின்றும் ஒரு ஆட்டுக்கிடா உக்கிரங்கொண்டு எழுந்து எல்லோரையும் துன்புறுத்தியது. தேவர் முதலியோரின் வேண்டுகோளுக்கிணங்கி முருகப் பெருமான் அதனை அடக்கி வாகனமாகக் கொண்டான் என்பது வரலாறு. "திருந்து கோன் ஞமன்தன் மெய்யிற் பிரிவித்து இருங் கண் வெள்யாட்டெழின் மறி கொடுத்தோன்" என்னும் பரிபாடலின்படி நமன் வெள்ளாட்டு மறியைத் தந்தான் என்பது மற்றோர் வரலாறு, "போர் அவுணன் அங்கம் இருகூறாய் அடல் மயிலும் சேவலுமாய் துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும்" என்னும் ஆன்றோர் வாக்கின் படி சூரபத்மனே சேவலும் மயிலுமாய் வந்தான் என்பது வரலாறு. முருகவேள் சேவலைக் கொடியாகவும், மயிலை ஊர்தியாகவும் கொண்டான். சூரன் மயிலாவதற்கு முன் இந்திரன் மயிலாகிப் பெருமானைத் தாங்கினன் என நூல்கள் கூறும். முருகன் அஞ்ஞான இருளை அடக்கி

வைத்து, ஞான ஒளியை உயர்த்துகின்முன் என்பது குறிப்பு. முருகனைப் போற்றுவோர் "சேவலும் மயிலும் போற்றி" என்று சேர்த்துத் துதிப்பர். "ஆடும் பரிவேல் அணி சேவல் எனப்பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்று அருணகிரியாரும் வேண்டுகின்முர். முருகன் நெடியனுக விளங்குகின்முன், அதாவது பிள்ளையா யிராமல் தான் வேண்டிய பெரு வடிவங்களை அவ்வப்போது கொள்கிமுன், "கோல மாமஞ்ஞை தன்னின் குலவிய குமரன் தன்னை, பாலனென்றிருந்தேன். அந்நாள் பரி சிவை உணர்ந்திலேன் யான்" என்று சூரனும் பெரு மானைப் புகழ்கின்முன். தோளில் தொடி என்னும் அணியை அணிந்துள்ளான், இடையில் இறுகக்கட்டிய உதர பந்தத்தின் மேல் நல்ல குளிர்ந்த மென்மையான ஆடையை நிலத்திற் பொருந்தி புரளும்படி உடுத்தியுள் ளான். இவ்வாறு நற்காட்சி யளிக்கும் முருகன் தன்னைச் சேவிக்கும் குன்றவர்களை மத்தளம் போன்ற பெருமையை உடைய தனது கைகளால் தழுவி அவர்களுக்கு அபய மளித்து அருளும் வகையில் குன்றுகள்தோறும் எழுந் தருளி யிருக்கிமுன். இத்தகைய சிறந்த கருத்துக்களை அமைத்து ஆசிரியர் பாடியுள்ள வரிகளைப் பார்ப்போம் :—

"செய் யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல் வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவல் அம்
கொடியன் நெடியன் தொடி அணி தோளன்
நரம்பு ஆர்த்தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும் பொறிக் கொண்ட நறும் தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன்
முழவு உறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென் தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்று தோருடலும் நின்றதன் பண்பே".

---

# 6. பழமுதிர் சோலை

சென்ற பகுதியில் முருகன் குன்றுகள்தோறும் எழுந் தருளியிருந்து காட்சியளிப்பதையும், வேலனும் குன்ற வரும் வழிபடும் முறைகளையும் பெருமான் அவர்களுக்கு அருள்செய்யும் தன்மைகளையும் கண்டோம். இனி அடுத்த ஆருவது பகுதியாகிய பழமுதிர் சோலைக்குச் செல்வோம். இது சோலைமலை என்றும் கூறப்படும். இதைத்தனி இட மென்றும் பொது இடமென்றும் கூறுவர், இப்பகுதியில் ஆங்காங்குள்ள அடியார்களுக்கு அருள்செய்யும்பொருட்டு முருகன் எழுந்தருளியிருக்கும் பொதுவான இடங்களைத் தொகுத்துக் கூறுகின்ருர். மக்களின் தோற்றம் எங் கெங்கு காணப்படுமோ அங்கெல்லாம் அவன் வீற்றிருக் கின்ருன். ஊர்கள்தோறும் நடைபெறும் திருவிழாக் களில் கலந்துகொண்டு காட்சி தருகின்ருன். அன்பர்கள் அன்புடன் துதிக்கும் உயரிய நிலைகளிலும் அவன் வசிக் கின்ருன். இவையன்றி வேலன் என்னும் பூசகன் ஆவேச மாடும் இடத்திலும், காட்டிலும், மரஞ்செறிந்த சோலை களிலும், அழகு பொருந்திய ஆற்றின் நடுவிலுள்ள திட்டுக் களிலும், ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், இன்னும் பல் வேறிடங்களிலும், நாற்சந்தி, முச்சந்தி முதலிய இடங்களிலும், புதிய பூக்களையுடைய கடப்ப மரத்திலும், ஊரின் நடுவே உள்ள மரத்தடியிலும், அம் பலங்களிலும், பசுக்கள் உராய்ந்துகொள்ளும் தறிகள் உள்ள இடங்களிலும், முருகன் எழுந்தருளியிருக்கின்ருன். எனவே இவையாவும் தெய்வ நினைப்பை உண்டாக்கும் இயற்கைக் கோயில்களாக விளங்குகின்றன. இவ்வாறு முருகன் பல இடங்களில் வீற்றிருந் தருள்வது அவ னுடைய பெருங்கருணையையும், அடியார்க்கு எளியனுந்

தன்மையையும் காட்டுகின்றது. இவைகளை யமைத்து ஆசிரியர் அடுக்கிக் காட்டும் அழகைப் பார்ப்போம் :—

"ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்து உடை நிலையினும்"

இனி குமரன் உறையும் குன்றக் கோயில்களில் குறப் பெண்கள் வழிபடும் முறைகளைக் கூறுகின்றார். மாட்சி மிகுந்த கோழிக்கொடியைப் பொருந்த அமைப்பர். நெய் யுடன் வெண்சிறுகடுகையும் அப்புவர். முருகனுக்குரிய மந்திரத்தை வெளியிற் கேட்காதபடி மெதுவாக உச்சரிப்பர். நான்கு விரல்களையும் மடக்கிப் பெருவிரலை நெஞ்சின்மீது வைத்து ஆவாகன முத்திரை காட்டுவர். இதனைக் குடந் தம் என்பர். அழகிய மலர்களைத் தூவுவர். வெவ்வேறான நிறமுடைய இரண்டு உடைகளை உடுத்துவர். சிவந்த நூலைக் கையில் காப்புக் கட்டுவர். வெண்மையான பொரியைத் தூவுவர். அரைத்த மஞ்சளுடன் நறுமண முள்ள சந்தனம் முதலிய பொருள்களையும் தெளிப்பர். குளிர்ந்த செவ்வரிமாலைகளையும் பிறமாலைகளையும் அசை யும்படித் தொங்கவிடுவர். பூஜைகளில் பலிப்பொருள் களையும் சேர்த்துவைப்பர். நல் மணமுள்ள தூபங்களை இடுவர். குறிஞ்சிப்பண்களைப் பாடுவர். பல இனிய வாத்தியங்களை ஒலிக்கச் செய்வர். அடர்ந்த மலைப்பக்கத் துள்ள நல்ல ஊர்கள் பசியும் பிணியும் பகையும் நீங்கி வாழ்க என்று வாழ்த்துவர். தெய்வம் இல்லை என்ற

மாறுபட்ட கொள்கையுடையோரும் அஞ்சும்படி பெருமையான மலைக் கோயில்களில் எழுந்தருளிக் காட்சி கொடுப்பன். இத்தகைய பூஜை முறைகளைக் காட்டும் பாட்டைப் பார்ப்போம் :—

"மாண்தலைக் கொடியோடும் மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐது உரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி

* * *

சிறுபசுமஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணை அற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ் இசை அருவியொடு இன்னியங் கறங்க

* * *

முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப்படுத்த உருகெழு வியன் நகர்"

இனி முருகன் எழுந்தருளியுள்ள சோலையின் இயற்கை எழில்களை மனக்கண்ணுக்குக் காட்டுகின்றார். மலையிலிருந்து வீழும் அருவிகள் பலநிறம் பொருந்திய துணிக் கொடிகளைப் போல அசைந்துவரும். அருவிகள் வேகமாக வரும்போது அகிற்கட்டைகளையும் சந்தன மரங்களையும் மூங்கில் வேர்களையும் தள்ளிக்கொண்டு வரும். உயர்ந் தோங்கிய வரையில் சூரிய பிம்பம்போல் தோன்றிக் குளிர்ந்த மணம்வீசுகின்ற தேன்கூடுகளைச் சிதைக்கும். பலாக்கனிகளையும், மலையுச்சியிலுள்ள சுரபுன்னையின் மலர்களையும் திரட்டிவரும். குரங்குகளும், பெண்யானை

களும், நடுங்கும்படி அலைகளை வீசிச் செல்லும். முத்துக், களையுடைய யானையின் தந்தங்களை உள்ளடக்கிப் பொன் னும் மணியும் நிறம் விளங்கத் தாவிவரும். வாழையின் அடிகளைச் சாய்த்துத் தென்னை மரங்களின் இளநீர்க்குலை களை உதிர்க்கும். மிளகுக் கொடியின் கொத்துகளைச் சிதறச் செய்யும். இவைகளைப் படம் பிடித்துக் காட்டும் பாட்டைப் பார்ப்போம்;—

''வேறு பல்துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டிவேரல்
பூ உடை அலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண் பொரு நெடு வரைப் பரிதியில் தொடுத்த
தண் கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்ப பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்து உடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத்தாழை
இளநீர் விழுக்குலை உதிரத்தாக்கிக்
கறிக் கொடிக் கருந்துணர் சாய''

இவ்வாறு வீழும் அருவியின் ஆரவாரத்தைக் கேட்டு கொடிய விலங்குகள் மலைக்குகைகளில் சென்று அஞ்சி ஒடுங்கும். இத்தகைய இயற்கை வனப்பையுடைய சோலை கள் நிறைந்த மலையில் முருகன் வீற்றிருக்கின்றான்.

இனி நமது புலவர் நக்கீரர் முருகன் அருளைப் பெற விரும்பும் புலவனை ஆற்றுப்படுத்தும் வலையில் அவனுக்

குச் சில உபாயங்களை எடுத்துக் கூறுகின்றார். "முருகன் இவ்வாறு பல இடங்களில் எழுந்தருளியிருப்பன். யான் அறிந்த அளவில் கூறினேன். அந்தந்த இடங்களில் இருப்பினும், பிற இடங்களில் இருப்பினும் நீ முருகனை நேரில்காணும்போது இனிய முகத்துடன் வாயார வாழ்த்தி கைகளால் தொழுது அவன் திருவடிகள் உனது தலையிற் பொருந்தும்படி வணங்குதல் வேண்டும்" என்று கூறி முருகனைப் புகழவேண்டிய முறைகளையும் புலவனுக்குச் சொல்லிக் காட்டுகின்றார்.

"நீண்ட பெரிய இமயமலைச் சாரலில் கருங்குவளை மலர்ந்த சரவணப் பொய்கையில் பஞ்சபூத தேவர்களில் ஒருவனான அக்கினிதேவன் கையிலிருந்து ஆறு தீப்பொறி களும் ஆறு குழந்தைகளாக விளங்க கார்த்திகைப் பெண் கள் பாலூட்டி வளர்த்த ஆறு வடிவு பொருந்திய செல்வனே! கல்லால மரத்தின் அடியில் வீற்றிருக்கும் தக்ஷிணாமூர்த்தி கோலங்கொண்ட பரமசிவனாரின் புதல் வனே! பார்வதி தேவியின் புத்திரனே. பகைவர்க்கு யமன் போன்றவனே. வெற்றியைத்தரும் போருக்குரிய துர்க்கைக்குப் புதல்வனே. அணிகளை அணிந்த வன தேவதையாகிய காளியின் புதல்வனே. வளைந்த வில்லை யுடைய தேவர்கள் படைக்குத் தலைவனே. கடப்ப மாலை யை மார்பில் அணிந்தவனே. வேதம் முதலிய நூல்களை ஓதாது உணர்ந்த பண்டிதனே." இக்கருத்துக்களைக் கொண்ட வரிகளைப் பார்ப்போம்:—

"ஆண்டாண்டு உறைதலும் அறிந்த ஆறே
ஆண்டாண்டு ஆயினும் ஆகக்காண்தக
முந்து நீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை

ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ
ஆல் கெழுகடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்ருேர் கூற்றே
வெற்றிவெல் போர்க் கொற்றவை சிறுவ,
இழை அணி சிறப்பிற் பழையோள் குழவி
வானேர் வணங்குவில் தானைத் தலைவ,
மாலைமார்ப, நூல் அறி புலவ !''

இவை போன்ற பல துதிமொழிகளைச் சொல்லிப் புகழும்படி புலவனுக்குக் கூறுகின்ருர். இறைவனுடைய புகழே பொருள்சேர் புகழும், திருப்புகழும் ஆகும். இப் பகுதியில் முருகனுடைய பெருமைகளும் வரலாறும் பொதிந்துள்ளன. அவன் திருவருளைப் பெற விரும்புவோர் இப்பகுதியைப் பலமுறை பாராயணம் செய்வதுண்டு. நமது ஆசிரியர் புலவரிடம் மேலும் சில செய்திகளைக் கூறுகின்ருர். ''நான் கூறிய முறைமைகளில் நீ முருகனைப் புகழ்ந்து உனது பெருமைகளை எல்லாம் முற்றும் அளவிட்டுக் கூறுதல் உயிர்களுக்கு அரிது. ஒப்பில்லாத புலமையுடையோய்! நின் திருவடியைப் பெற நினைந்து வந்தேன். என்று சொல்லி வேண்டுக. அவ்வளவில் பல்வேறு வடிவங்கொண்ட சிறு பூதகணத்தார் விழாக்கள் நிகழும் அவ்விடத்தே தோன்றி முருகனிடம் சென்று ''பெருமானே, அறிவு முதிர்ந்த புலவன் ஒருவன் இனிமை பொருந்திய நல்ல சொற்களால் வாழ்த்திக்கொண்டு தேவரீரது பெரும் புகழைநாடி வந்துள்ளான். அவன் காக்கப் படத்தக்கவன்.'' என்று தெரிவிப்பர்.

அப்போது முருகன் தெய்வத்தன்மைபொருந்திய வானளாவிய பெருவடிவத்தோடு தோன்றுவன். அவ்வுருவத்தைச் சாமானியர் காண முடியாதாகையால் அச்சம் தரவல்ல அப்

பெருவடிவத்தை அடக்கி மணமும் தெய்வத்தன்மையும், இளமையும், அழகும் நிறைந்த இனிய கோலத்துடன் தோன்றி, "பயத்தை விடுக, உனது வருகையை நான் அறிவேன்" என்று அன்பு கலந்த நன்மொழிகளைக்கூறி அருள்வன். கடல் சூழ்ந்த உலகத்தில் உனக்கு ஒப்பார் ஒருவருமில்லை என்று சொல்லும்படி பெறுதற்கரிய சிறந்த திருவருளாகிய பரிசிலைத்தருவன். இவ்வாறு நக்கீரர்புலவனை ஆற்றுப்படுத்தும் முறைகளைக்காட்டும் வரிகளைப் பார்ப்போம்:—

"யான் அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின்
நின் அடி, உள்ளி, வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய் எனக்
குறித்தது மொழியா அளவையில் குறித்துடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறு அயர் களத்து வீறு பெறத்தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண் புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான் தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்கு சால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின் வரவு என
அன்பு உடை நன்மொழி அளைஇ விளிவுஇன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்கும்."

இப்பரிசிலைக் "கந்தழியைப் பெறுதல்" என்பர். கந்தழியாவது ஒரு பற்றும் இன்றி அருவாய்த்தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருள் ஆகும்.

இது காறும் முருகன் வீற்றிருக்கும் படைவீடுகளைக் கண்டோம். முதலில் பரங்குன்றத்தின் இயற்கைகளையும் தெய்வ மகளிர் ஆடிப்பாடி மகிழ்வதையும், முருகன் காட்சி தருவதையும் பார்த்தோம். திருச்செந்தூரில் முருகன் கடலருகே கவின்பெற விளங்குவதையும் யானையின் மேல் இவர்ந்து தரிசனங் கொடுப்பதையும், ஆறுமுகங்கள், பன்னிரு கரங்களின் தன்மைகளையும் கண்டோம். ஆவினன்குடியில் அவன் சிவகனியாய்ப் பொலிவதையும், முனிவர், கந்தர்வர் முதலியோர் முன்சென்று வழிபடுவதையும் கண்டோம். திருவேரகத்தில் அவன் தாரகவடிவாய்த் திகழ்வதையும் அந்தணர்கள் அவனை நியமத்துடன் வழிபடுவதையும் கண்டோம். குன்றுதோருடலில் அவன் குன்றுகள் தோறும் எழுந்தருளிக் காட்சி கொடுப்பதையும், வேலன் ஆவேசமாடுவதையும், குன்றவர் குரவைக் கூத்தாடி மகிழ்விப்பதையும் கண்டோம். பழமுதிர் சோலையில் அவன் கோயில் கொண்டிருக்கும் இடங்களையும், ஆசிரியர் புலவனை ஆற்றுப்படுத்தும் முறைகளையும் பார்த்தோம். "ஆறு திருப்பதியில் வளர் பெருமாளே" என்கிறார், அருணகிரியார். "ஆறு திருப்பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே" என்று குமரகுருபரர் கூறுகின்றார். எனவே ஆசிரியர் புலவனை ஆற்றுப்படுத்திய முறைகளை நாமும் பின்பற்றி நலமுறுவோமாக!

"நக்கீரர் தாமுரைத்த நன் முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்."

---

Trichinopoly United Printers Limited, Tiruchirappalli